## பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு

# 193 தமிழ்நாடு காவல்துறை- சீருடை அலுவலர்கள் - பணியாளர்களுக்கு அண்ணா பதக்கங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப். 15 -

தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, ஊர்க்காவல் படை, விரல்ரேகைப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர்15-ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்தஆண்டு, காவல் துறையில் தலைமைக்காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 150 பணியாளர்கள் மற்றும் அலுவலர் களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 22 பணியாளர்கள் மற்றும் அலுவலர் களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில் முதல்நிலை சிறைக் காவலர் முதல் உதவி சிறை அலுவலர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், ஊர்க்காவல்படையில் ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத்தளபதி வரையிலான 5 ஊர்க்காவல்படை அலுவலர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பா ளர்கள் மற்றும் 4 தடய அறிவியல் துறை அலுவலர்கள்/பணியாளர்களுக்கு அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் “தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்” வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், சு.மயில்ராஜு உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் அ.புனிதராஜு, முன்னணி தீயணைப்போர்-6610 ஆகிய இருவரும், கடந்த 12.12.2024 அன்று திண்டுக்கல், திருச்சி சாலையில் உள்ள சிட்டி மருத்துவ மனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிய 32 நோயாளிகளை,சவாலான மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையிலும் மிகுந்த ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து, பாதுகாப்பாக மீட்டு அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், கடந்த 12.05.2025 அன்று மதுரையில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும்திருவிழாவின் போது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கிய ஒரு 17 வயது சிறுவனை, பாதுகாப்பு பணியில் இருந்த மா.இராஜசேகர், தீயணைப்போர்-11066, சோழவந்தான் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை மாவட்டம்,தன்உயிரையும்பொருட்படுத்தாமல், ஆற்றில் குதித்து சிறுவனை மீட்டு,முதலுதவி செய்து, சோழவந்தான் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்று சிறுவனின் உயிரை காப்பாற்றினார். இவர்களின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி, இம்மூவருக்கும் “தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம்”வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட பதக்கங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும்

# வாக்குச்சாவடிக் கூட்டங்களை நடத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதிமொழி ஏற்பு!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் பேட்டி!



காஞ்சிபுரம், செப். 15-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச் சாவடிகளிலும் இன்று அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு வாக்குச்சாவடி வாரியாக கூட்டங்கள் நடத்தி தமிழ் நாட்டிற்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து 5 தீர்மானங்கள் நிறைவேற்றி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்ற உறுதி மொழியை ஏற்க உள்ளனர் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று ஆலந்தூரில் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க, தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் ஜூலை 1 அன்று துவங்கி வைத்தார்.

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்ட மன்றத் தொகுதியிலும் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று 9 லட்சத்து 81 ஆயிரத்து 526 பேரை உறுப்பினராக சேர்த்துள்ளனர்.

3 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர். இப்போது ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இரண்டாவது கட்டம் தொடங்குகிறது.

செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடிகள் வாரியாக கூட்டங்கள் நடத்தி

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறை, வாக்குரிமையை பறிக்கும் S.I.R., நீட் தேர்வு, இந்தி திணிப்பு, கல்வி நிதியை நிறுத்தி வைப்பு, 100 நாள் வேலைக்கு நிதி தராதது, மாநில உரிமைகளை பறிப்பது, கீழடி தொன்மையை மறுப்பது என ஒன்றிய பா.ஜ.க. அரசின் அந்நீதிகளை விரிவாக விளக்கி தீர்மானம் நிறைவேற்ற உள்ளோம்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் BLA2 வாக்குச்சாவடி நிலை முகவர்கள், BDA பூத் டிஜிட்டல் ஏஜென்ட், BLC வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் புதிதாக கழகத்தில் இணைந்த குடும்பங்களையும் பங்கேற்கச் செய்து அனைவரும் இனைந்து ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழ்நாட்டை பாதுகாப்போம், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதிமொழி ஏற்று கொள்ள உள்ளனர்.

செப்டம்பர் 17 அன்று கரூரில் லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் கழக முப்பெரும் விழாவில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப்படும்.

அன்றைய தினம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.

அடுத்த கட்டமாக மாவட்ட அளவில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானக் கூட்டங்கள் வருகிற 20ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கரூரில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும்பூத் அளவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் மீண்டும் நிறைவேற்ற உள்ளோம்.

பாசிச பா.ஜ.க.வையும் அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வையும் எதிர்த்து மக்களை ஓரணியில் திரட்டி இம் மக்கள் ஆதரவோடு வருகிற சட்டமன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூடுவோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# இந்தக் கணத்திலும் நீயே ஆள்கிறாய் அண்ணா!



நனைந்த சமூகத்தை
நீதான் பற்றவைத்தாய்;
இன்னும் அணையவில்லை
அந்த எரிதழல்

தமிழ்நாட்டு
அரசியல் அகராதியின் முதற்சொல்
அகரமல்ல; அண்ணா

இன்றைய அரசியல்வரை
உன் நெருப்பு இல்லாமல்
பருப்பு வேகாது

வாளால் சாதிக்கவேண்டியதை
வாழைத்தண்டு கொண்டு
சாதித்தவன் நீ!

இன்றைய
வலிமையோடு ஒப்பிட்டால்
உன் எளிமை அரசியல் அதிசயம்

எதையும்
அனுபவிக்காதவன் நீ

நீ துய்த்ததெல்லாம்
கைதட்டல் என்ற
ஒலிப்பொருள் ஒன்றுதான்

டெல்லிக்கு நீ இன்னும்
கெட்ட கனவு
அதில் விழித்துக்கொண்டவர்களை
நீ மேலும் தூங்கவிடுவதில்லை

உன் நாத்திகத்தைவிட்டுத்
தமிழர்கள் நகர்ந்திருக்கலாம்;
கடவுள்கள் இன்னும்
தலைமறைவாய்த்தான் இருக்கிறார்கள்

தமிழர்களின் பெருநிகழ்வு
நீ பிறந்தது
துயர் நிகழ்வு
அறுபதில் நீ இறந்தது

தமிழன்
கொடுத்து வைக்காதவன்



கவிப்பேரரசு
வைரமுத்து



மாங்காடு நெல்லித்தோப்பு பகுதி த.வெ.க. கட்சியைச் சேர்ந்த எஸ்.மணிகண்டன், எஸ்.விக்னேஸ்வரன், எஸ்.தனுஷ் குமார், பி.பிரபு, ரகுமான், பன்னீர்செல்வம், தமிழ்செல்வம் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.


